## தைப்பூச விழாவை ரத்து செய்வதற்கான

# முயற்சிகள் வேண்டாம்!

### டான்ஸ்ரீ நடராஜா வலியுறுத்தல்

(பார்த்திபன் நாகராஜன் / கி. தீபன்)

பத்துமலை, டிச. 24- தைப்பூச விழாவை ரத்து செய்வதற்கான முயற்சிகளை எந்தவொரு தரப்பினரும் மேற்கொள்ள வேண்டாம் என்று ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தானத்தின் தலைவர் டான்ஸ்ரீ ஆர். நடராஜா நேற்று வலியுறுத்தினார்.



பக்கம் 12

முதல் பக்கத் தொடர்ச்சி

## தைப்பூச விழாவை ரத்து.....

2021ஆம் ஆண்டுக்கான தைப்பூச விழா ஜனவரி 28ஆம் தேதி கொண்டாடப்படவுள்ளது.

பத்துமலை, பினாங்கு, ஈப்போ, கோலசிலாங்கூர், ஜொகூர் உட்பட பலநாடு தழுவிய நிலையில் உள்ள முருகன் ஆலயங்களில் தைப்பூச விழா ஒவ்வோர் ஆண்டும் வெகு விமரிசையாக கொண்டாடப்படும்.

ஆனால் கோவிட்-19 தொற்றின் தாக்கத்தால் தைப்பூச விழா எவ்வாறு கொண்டாடப்படும் என்று எங்களுக்கு தெரியவில்லை.

இவ்விவகாரம் தொடர்பில் ஒற்றுமைத்துறை அமைச்சின் கீழ் செயல்படும் மித்ரா இயக்குநருடன் தேவஸ்தானம் உட்பட நாடுதழுவியநிலையில் உள்ள முருகன் ஆலய பொறுப்பாளர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

இரண்டு முறை கூட்டம் நடைபெற்றது. பல புதிய கட்டுப்பாடுகள் விதிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தைப்பூசத்தை பண்பாடு மாறாமல் நடத்துவதற்கு தேவஸ்தானம்பலகோரிக்கைகளையும்முன்வைத்தது.

இக்கோரிக்கைகள் அனைத்தும் இந்தியர்களின் பிரதிநிதியாக இருக்கும் மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ எம். சரவணனின் பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

ஆகவே தைப்பூசத்தை எப்படி நடத்துவது. அதற்கான கட்டுப்பாடுகள் என்ன என்பதை அரசாங்கம் விரைவில் அறிவிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அந்த அறிவிப்பை தொடர்ந்தே தேவஸ்தானத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இருக்கும்.

இத்தருணத்தில் தைப்பூச விழாவிற்கான நடைமுறைகளை மலேசிய இந்து சங்கம் விரைவில் அறிவிக்கும் என அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

ஒற்றுமைத்துறை அமைச்சிடம் ஆலய பொறுப்பாளர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். தேசிய பாதுகாப்பு மன்றம், சுகாதார அமைச்சு ஆகியவற்றின் ஆலோசனைக்கு பின்பு தான் தைப்பூச விழா குறித்து அறிவிப்புகள் வரும்.

அதற்குள் அறிவிப்பை செய்வதற்கு அவர் என்ன அரசாங்கத்தின் பிரதிநிதியா. அவர் ஏன் முந்திக் கொள்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை.

பத்துமலையில் தைப்பூச விழா நடக்கவில்லை என்றால் அதில் பலருக்கு மகிழ்ச்சி. அந்த வரிசையில் இந்து சங்கத் தலைவரும் இணைந்து விட்டாரா என்ற கேள்வி எனக்குள் எழுந்துள்ளது.

பினாங்கு இந்து அறப்பணி வாரியத்தை மாநில துணை முதல்வர் பேராசிரியர் இராமசாமி வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

அவரே ரத ஊர்வலம் ரத்தாகலாம். அரசாங்கத்தின் அறிவிப்புகளுக்காக காத்திருக்கிறோம் என்று கூறுகிறார். ஆனால் இந்து சங்கத் தலைவர் தைப்பூச விழாவில் ஏன் அவசரம் காட்டுகிறார்.

பல மாதங்கள் விரதம் இருந்து பக்தர்கள் நேர்த்திக் கடன்களை பூர்த்தி செய்வார்கள். அவர்களுக்கு எவ்வாறு வழிகாட்ட வேண்டும். அதற்கு எப்படி தைப்பூச விழாவை நடத்துவது குறித்து தான் நாம் ஆலோசிக்க வேண்டும்.

மாறாக தைப்பூச விழாவை ரத்து செய்வதற்கான முயற்சிகளை யாரும் மேற்கொள்ள வேண்டாம். அதனை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று டான்ஸ்ரீ நடராஜா கூறினார்.

பத்துமலை தைப்பூச விழா குறித்து வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள தேவஸ்தானத்தின் கூட்டத்திலும் விவாதிக்கப்படும்.

அதே வேளையில் மலேசிய இந்து ஆலயங்களின் ஒருங்கிணைப்பு பேரவையிலும் தைப்பூச விழா குறித்து பேசப்படும்.

பக்தர்களின் பாதுகாப்புதான் தேவஸ்தானத்திற்கு முக்கியம். முருகப் பெருமான் இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். தைப்பூசம் வேண்டாமா இல்லையா என்பதை அவர் முடிவு செய்வார்.

அதற்குள் யாரும் முந்திக் கொண்டு அறிக்கைகளை வெளியிட்டு குட்டையைகுழப்ப வேண்டாம் என்று டான்ஸ்ரீ நடராஜா கேட்டுக் கொண்டார்.

Newspaper : Malaysia Nanban

Date : 24 December 2020

Page : 1 &12

Title : **Do not attempt to cancel the Thaipusam ceremony – Tan Sri Nadarajah**

Summary : President of Sri Maha Mariamman Devasthanam, Tan Sri Nadarajah emphasized to do not attempt to cancel the Thaipusam ceremony that will be held on coming 28th January 2021. Every year this ceremony will be celebrated grandly in Batucaves, Penang, Johor, Kuala Selangor, Ipoh, and other states that having the lord Murugan temples. Since we are affected badly due to Covid 19 pandemic, we have no idea about the celebration. The Devasthanam management have discussed about this with director of MITRA, which is an agency under National Unity Ministry. We also submitted our solicitations to the Minister of Human Resources, Datuk Seri M. Saravanan. We will announce about the celebration once we get the reflection from Ministry of National Unity, Ministry of Health and National Security Council. Tan Sri Nadarajah came up with such announcement following the previous news report by President of Hindu Society.